
# திராவிட சினிமா

14

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். கல்வியில் முன்னேற்றம் கண்டு கொண்டிருந்த தலைமுறைக்குக் கொள்கை பேசிய கலைவடிவங்கள் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தன. அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள் உதவி : ஞானம்





# சிவாஜிக்கு பயிற்சிக் களம் அமைத்த கலைஞர்!

■ **வீ.மா.ச.சுபகுணராஜன்**

**மா**டர்ன் தியேட்டர்ஸ் அதிபரான டி.ஆர். சுந்தரம் தயாரித்து இயக்கி, 1953-மே மாதம் வெளியாகி மாபெரும் வெற்றி பெற்றது **'திரும்பிப் பார்'** திரைப்படம். இந்தப் படத்தின் கதைக் களமும் அரசியலை மையமிட்டதுதான். ஆனால், அரசியலின் நோக்கு திசை **'சமத்துவ சமதர்மம்'**.

காங்கிரஸ் ஆட்சி அமைந்து தொழிலாளர் நலன் கருதாது, முதலாளிகளின் கட்டளையைச் சிரமேற்கொண்டு செயல்பட்ட காங்கிரஸ் தொழிற்சங்கத் தலைவர்களை அம்பலப்படுத்துகிறது இத்திரைப்படம். அவர்களுக்கெதிராக களமிறங்கிப் போராடுகிறான் பகுத்தறிவாளர் பிரதிநிதியான தொழிற்சங்கத் தலைவன் பாண்டியன்.

"மஞ்சத்திலே முதலாளி, பஞ்சத்திலே பாட்டாளி என்று முழங்கிவிட்டு, லஞ்சத்திலே புரளும் பரந்தாமனல்ல நான்" எனக் கையூட்டுக் கொடுக்க முனையும் முதலாளியிடம் சமதர்ம சமத்துவம் பேசி அதிர வைக்கிறான். இந்தக் காலத்தில்தான் தி.மு.க. தனது தொழிற்சங்கம் கட்டும் வேலையைத் தொடங்கியது என்பது கவனத்துக்குரியது.


## எதிர்மறைப் பாத்திரத்தில் சிவாஜி!

சிவாஜி கணேசன் இதிலே முதலாளியின் கைக்கூலியாக 'நமஸ்காரம்' செய்யும் 'தேசியவாத' தொழிற்சங்கத் தலைவனாக எதிர்மறைப் பாத்திரம் ஏற்றிருப்பார். 'பராசக்தி'யில் கல்யாணியை பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளாக்கும் அத்தனை பாத்திரங்களின் மொத்த வடிவமாக பரந்தாமன். பெண் பித்தன்.

"அன்புக்கரசி ! அழித்தெழுதாச் சித்திரமே ! ஆடிவரும் பொன்விளக்கே! அழகுமணி மாளிகையின் அலங்காரத் திருவிளக்கே" எனக் கொஞ்சும் மொழி பேசி வஞ்சியரை வலையில் வீழ்த்தி, அவர் தம் வாழ்வைச் சிதைக்கும் கொடூரன். அன்பு தெய்வமான அக்காவின் (பண்டரிபாய்) பாசத்தைத் தனக்கான பாதுகாப்பு அரணாக்கிக் கொள்ளும் அயோக்கியன். எழுத்தாளன் என்ற போர்வையில் வலம் வரும் கதைத் திருடன். பகுத்தறிவாளன் பாண்டியனின் (நரசிம்ம பாரதி) நாவலை (பாட்டாளியின் குரல்) தனதெனப் பதிப்பிக்கத் தயங்காதவன்.

"பெண்கள் மட்டுமல்ல, தொழிலாளர்களின், பாட்டாளிகளின் பிரச்சினை தீர வேண்டுமானால், பெரும் கிளர்ச்சி நடக்கவேண்டும். பாட்டாளிகள் இந்த நாட்டின் முதுகெலும்புகள். ஒரு தேசத்தின் உயிரே தொழிலாளிகள்தான். அவர்களுக்கான விடுதலைப் போராட்டத்தை உடனே துவங்க வேண்டும். அதற்காக நான் கங்கணம் கட்டி விட்டேன்" எனப் பசப்பு வார்த்தை பேசி, அவர்களை வேலைநிறுத்தம் செய்யத் தூண்டி விட்டு, 'பேச்சுவார்த்தை' என்ற பெயரில் முதலாளியிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு, முதலாளி கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டாரென தொழிலாளர்களிடம் பொய்யுரைத்து ஏமாற்றுபவன்.

சிவாஜி கணேசன் எனும் நடிகரின் / நடிக ஆளுமையின் பரிணாம வளர்ச்சியில் கலைஞரின் பங்களிப்பு மகத்தானது. 'பராசக்தி'யில் அநீதிக்கெதிரான கனல் வார்த்தைகளைப் பேசும் இளைஞன் என்றால், 'திரும்பிப் பார்' படத்தில் முற்றிலும் எதிர்மறையான நாயகன் (Negative Hero). **'பணம்'** படத்திலும் அப்பாவின் சொத்தை இழக்க மனமின்றி, பணத்தாசை கொண்டு மனைவியைக் கைவிடும் செயலற்றவன். **'ரங்கோன் ராதா'** வில் அப்பாவின் அடாவடிகளை அம்பலமாக்கி, அவதூறுக்குள்ளாகும் தாயையும், காதலித்த பெண்ணையும் கைப்பிடிக்கும் நேர்மறையான நாயகப் பாத்திரம். **'மனோகரா'** வில் மன்னரான தந்தையின் அநீதிக்கெதிராக கொந்தளித்து எழும் மாவீரன்.



**'ராஜா ராணி'**யிலோ முற்றிலும் காதல் உணர்வால் பீடிக்கப்பட்ட துடிப்பான இளைஞன். ஆனால், படத்தின் பகுதியான நாடகக் காட்சிகளில் சேரன் செங்குட்டுவனாக, சாக்ரடீஸாக தனது அற்புதமான நடிப்புத் திறனை வெளிப்படுத்தும் வாய்ப்பு.

## பயிற்சிக் களமான எழுத்து!

ஒரு நடிகரின் முதல் நான்கு ஆண்டு கால (1952-56) திரை வாழ்வில் உச்சம் தொட, அவரது திறன் முக்கியமானதுதான் என்றாலும், அந்தத் திறனை வெளிப்படுத்தும் கதைக் களங்களை உருவாக்கியது கலைஞர் எனும் உன்னதப் படைப்பாளிதான். ஒரு நடிகனின் உடல்மொழியைத் தூண்டி நடிப்பாற்றலை வெளிச்சமிட்டுக் காட்டுவது, காட்சியமைப்பும் அதற்கேற்ற வசனங்களும்தான்.

ஒரு நடிக ஆளுமை உருவாக்கத்தில் அகவயமான பாவங்களைத் தூண்டும் உணர்ச்சிமிக்க வசனங்களின் பங்கு அபாரமானது. முகபாவம் உருப்பெற வெளிப்பட, அதற்கேற்ற சூழலும் மொழியுமே அடிப்படை. அந்த வகையில் சிவாஜி எனும் மா நடிகரின் பயிற்சிக்களம் கலைஞரின் திரைப்படங்களே.

'திரும்பிப் பார்' திரைப்படம் அந்த வகையில் மிக முக்கியமானது. சிவாஜி எனும் நடிகர் ஒரு வில்லன் பாத்திரத்தை நாயகனின் உடல்மொழியில் வெளிப்படுத்துகிறார் என்பது கவனத்துக்குரியது. பரந்தாமன் கடைந்தெடுத்த அயோக்கியன், துரோகி, பெண்களை வஞ்சிக்கும் கிராதகன். ஆனாலும், அவனது மொழியில் வில்லத்தனம் இல்லை. 'முதுகெலும்பு உடைய வேலை செய்யும் தொழிலாளிக்கு முகாரிதான் மோகன ராகமா?' எனும் வசியமான கலைஞரின் வார்த்தைகள் 'வில்லத் தனத்தை' ரகசியமாக்க உதவுகிறது.

தொழிலாளிகளின் 'நிரந்தரத் தலைவனாக' தன்னை அறிவித்துக் கொள்பவன் முதலாளி மகளை மணப்பதை, அதற்கொரு காரணம் சொல்லி, தொழிலாளர்களை ஏமாற்றி விடலாமெனப் பேசுகிறார்கள் நண்பர்கள். அது 'மாஸ் சைக்காலஜி' எனவும் பேசப்படுகிறது. அதே போல **விதியின் விளையாட்டு என விளக்கப்படும் ஒரு விபரீதம் பற்றிய பேச்சில் விதியை 'அது ஒரு பாரசூட் போன்றது. இறங்குமிடத்தை பறப்பவன் தீர்மானிக்க முடியாது' என்பான் பரந்தாமன். பேசுவது யாராயினும் எழுதியது கலைஞர் என்பதே கவனத்துக்குரியது.**

## பெண்மை போற்றுதும்...

இதுவரையான விவரணைகள் பரந்தாமனையே மையமிடுவதால், அவன்தான் பிரதானப் பாத்திரமெனக் கருதிவிடக் கூடாது. கலைஞர் படங்களில் பெண் பாத்திரங்கள் முக்கியமானவையாக இருப்பது போலவே, இந்தப் படத்திலும் அவனது அக்கா பூமாலையே (பண்டரிபாய்) கதையின் மையம். வழிதவறி நடக்கும் தம்பியைக் கண்டிப்பதும், அவனைக் கைவிட்டு விடமுடியாமல் தவிப்பதுமான பாத்திரம்.

மணமாகாமல் தம்பிக்காகவும், அக்கா மகள் குமுதாவுக்காகவும் தியாகியாக வாழ்பவள் பூமாலை. துரோகியான தம்பியின் கொடூரங்களைத் தாங்காமல் தவிப்பது அவளே. அதே வேளையில் இறுதி வாய்ப்பாய், பாலைவனச் சோலையாய், பகுத்தறிவாளன், எழுத்தாளன், 'சமத்துவம் சமதர்மம்' பேசும் தொழிற்சங்கச் செயல்பாட்டாளனுமான பாண்டியன் மீது மலரும் காதலை தனது மகள் போன்ற குமுதாவுக்காக விட்டுவிடுவதும் அவளே.

அவள் பாண்டியனிடம் பேசும் வரிகளாக கலைஞர் எழுதுகிறார், **'கொடி படரும் கொம்பிலே செடி படர முயன்றதுதான் தவறு'** என்று. என்ன கவித்துவமான மொழி. இவருக்கு இலக்கிய அங்கீகாரம் வழங்க குப்பை கிளறும் கோழிகளுக்கேது தகுதி. பரந்தாமனை இறுதியாக அதிர்ச்சிகரமான 'தனது உடலும் பெண் உடல்தான் வேண்டுமானால் எடுத்துக் கொள்' எனும் வார்த்தைகளால் கதறி அழுது மனமாற்றத்துக்கு இட்டுச் செல்கிறாள். பூமாலையே முதலாளியிடம் மன்றாடி மனம் மாற்றி தொழிலாளர்களை மில் நிர்வாகத்தின் பகுதியாக்குகிறாள்.

இந்த 'உடலெல்லாம் கண்ணான இந்திரன்' பரந்தாமன் இறுதியில் அழிக்கப்படுகிறான். அவனது மனந்திருந்திய மன்றாட்டை ஏற்றுக் கொள்ள அகலிகையல்ல, அவனால் வஞ்சிக்கப்பட்டு படுகுழியில் தள்ளப்பட்ட பாமா.

...படம் விரியும்

## உண்மை அறியும் எழுத்தாளன்!



'அதிகாரத்துக்கு எதிரான சாமானியரின் போராட்டம் என்பது, மறதிக்கு எதிரான நினைவின் போராட்டமே' என்ற புகழ்பெற்ற சிந்தனைக்குச் சொந்தக்காரர் எழுத்தாளர் மிலன் குந்தேரா. செக் நாட்டைச் சேர்ந்த அவர், சில காரணங்களால் ஃபிரான்சில் தஞ்சமடைந்து ஃபிரெஞ்சு மொழியில் எழுதத் தொடங்கினார்.

தன் வாழ்நாளில் 10 நாவல்கள், ஏகப்பட்ட கட்டுரைத் தொகுப்புகளைக் கொடுத்த அவர் பெயர், ஒவ்வோர் ஆண்டும் இலக்கியத்துக்காக நோபல் பரிசுப் பட்டியலில் இடம்பெறும். அந்த விருது அவருக்குக் கிடைக்கவில்லையென்றாலும், 'தி அன்பியரபிள் லைட்னெஸ் ஆஃப் பீயிங்' என்ற 1984- ஆம் ஆண்டு வெளியான அவரின் படைப்பு, காலம் கடந்து நிற்கும் ஒன்றாகத் திகழ்கிறது. 'வாழ்க்கை என்பது ஒரு முறை மட்டுமே நிகழ்வது. அதை இரண்டாவது முறையாக வாழ முடியாது என்பதே பெரும் விடுதலை' என்ற செய்தியைச் சொல்வதுதான் அந்தப் புத்தகம். அவர், ஜூலை 11-ஆம் தேதி காலமானார். அவருக்கு வயது 94.

சமகால எழுத்தாளர்களில் கருத்து சுதந்திரத்துக்காக அவரைப் போல காத்திரமாக எழுதியவர்கள் எவருமில்லை என்பதால், உலகம் அவரைப் போற்றுகிறது.

## ஃப்ளாஷ்பேக்



### வாழ்த்துகளால் உயர்வு!

1996-ஆம் ஆண்டில் நடைபெற்ற சென்னை மாநகராட்சித் தேர்தலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயராக இன்றைய முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள் பொறுப்பேற்றிருந்தார். அப்போது, சென்னை, பெரம்பூர் தொகுதியில் அமைந்திருக்கும் மாதவரம் நெடுஞ்சாலையில் உள்ள மாநகராட்சிப் பள்ளி விழாவில் கலந்துகொண்டார்.



குமாரசாமி

அப்பள்ளி மாணவர்களாக இருந்த எனது மகள் சசிரேகாவையும், மகன் சார்லஸையும் வாழ்த்தி நன்றாகப் படிக்குமாறு அறிவுறுத்தினார், அத்தருணத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. இன்றைக்கு என் மகள் லண்டனில் மனித வளத்துறையிலும், மகன் சென்னையில் ஐ.டி. துறையிலும், இவர்களை வாழ்த்திய தளபதி அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் இருப்பது, தந்தையாகவும் கழகத் தொண்டனாகவும் எனக்கு பெரு மகிழ்ச்சி அளிக்கிறது.

**-ஜி.குமாரசாமி, மாவட்டத் துணை அமைப்பாளர், வழக்கறிஞர் அணி, சென்னை கிழக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033 – 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### வாகன வாழ்க்கை!

**1971-ஆம் ஆண்டு தேர்தல். அண்ணாவை இழந்துவிட்ட கழகம், காமராஜர், இராஜாஜி ஆகிய செல்வாக்குமிக்க தலைவர்களின் கூட்டணி எனப் பல நெருக்கடிகளுடன் கலைஞர் தேர்தலைச் சந்தித்தார். கழகத்தினர் ஒவ்வொரு வரையும் பந்தயக் குதிரையாக முடுக்கிவிட்ட கலைஞர், ஒரு மாதத்துக்கும் மேலாக, தமிழ்நாடு முழுவதும் இரவு-பகல் பாராமல் வாகனப் பிரச்சாரம் மேற்கொண்டார். அதிகாலையில் எழுந்து எங்காவது ஓரிடத்தில் குளிப்பது, வழியில் சாலை ஓரங்களில் வாகனத்தை நிறுத்திவிட்டு உணவு, பிரச்சாரத்தில் பேச வேண்டிய இரண்டு ஊர்களுக்கு இடைப்பட்ட பயண நேரங்களில் சிறிது ஓய்வு என வாகனத்திலேயே வாழ்ந்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

178




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023. Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.